**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

2025 ம் ஆண்டு மார்ச் மாதம் 20 ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.S.இராமச்சந்திரன், B.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - சிவக்குமார் | **PW-43** | ஜாதி | ------------- |
| த/க பெயர் | - சின்னத்தம்பி | | தொழில் | - |
| கிராமம் | - | | சமயம் | - |
| தாலுக்கா | - | | வயது | - 46 |

**(எதிரி ஆஜர் )**

**<u>முதல் விசாரணை:</u>-**

நான் தற்பொழுது சென்னை எழிலகத்தில் உள்ள வருவாய்த்துறை தலைமை அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். 2012 ஆம் ஆண்டு நான் திருவள்ளூர் மாவட்டம் பாண்டூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வந்தேன். என்னுடன் கிராம உதவியாளராக கோவிந்தசாமி என்பவர் பணியாற்றி வந்தார். 18.09.2012 அன்று தர்மபுரி மாவட்ட காவல் அலுவலகத்தில் இருந்து ஜெயராமன் மகன் பிரவீன் குமார் என்பவர் நான் பணியாற்றும் பாண்டூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறாரா என்ற விவரத்தை கேட்டார்கள் அது குறித்து நானும் எனது கிராம நிர்வாக உதவியாளரும் மேற்படி கிராமத்திற்கு சென்று விசாரித்தோம். அவ்வாறு விசாரித்த வகையில் எங்களிடம் கேட்ட ஜெயராமன் மகன் பிரவீன் குமார் என்பவர் மேற்படி ஊரில் தான் இருக்கிறார் என்று போலீசாருக்கு தகவல் தெரிவித்தேன். மறுநாள் காலையில் 10 மணி அளவில் போலீசார் மறுபடியும் போன் செய்து எனது கிராமத்திற்கு வர சொன்னார்கள் நான் அங்கு சென்று பார்த்தேன். காவல் ஆய்வாளரை சந்தித்தேன் மேற்படி போலீசார் எங்களை அழைத்துக் கொண்டு பஸ் ஸ்டாப் அருகே வந்தார்கள் அங்கு பிரவீன் குமார் என்பவர் நின்று கொண்டிருந்தார் மேற்படி பிரவீன் குமார் நான் போலீசாருக்கு அடையாளம் காண்பித்தேன். மேற்படி போலீசார் என் முன்பாக பிரவீன் குமாரை விசாரித்தனர். அவர் போலீசாரிடம் ஒப்புதல்

வாக்குமூலம் கொடுத்தார் மேற்படி காலகட்டத்தில் நடந்த டிஎன்பிஎஸ்சி கேள்வித்தாள் கசிந்தது சம்பந்தமாக மேற்படி பிரவீன் குமார் வாக்குமூலம் கொடுத்தார். அவர் எங்களை வீட்டிற்கு அழைத்துச் சென்று லேப்டாப், செல்போன் சில கேள்வித்தாள்கள் எடுத்து ஆஜர் செய்ததை போலீசார் கைப்பற்றினார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் கிராம உதவியாளரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் நடுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.42**. என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவதாக உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.43**. என்னிடம் காண்பிக்கப்படும் லேப்டாப் மற்றும் செல்போன் மற்றும் கையால் எழுதப்பட்டு நகல் எடுக்கப்பட்ட கேள்வித்தாள்கள் தான் போலீசார் கைப்பற்றியது. லேப்டாப் **சா.பொ.20** செல்போன் **சா.பொ.21** மற்றும் கையால் எழுதப்பட்டு நகல் எடுக்கப்பட்ட கேள்வித்தாள்கள் **சா.பொ.22**. மேற்படி பிரவீன் குமார் அவர்களை தற்பொழுது பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும். (எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை ஆஜரின்மைக்கு மனு தாக்கல் செய்யப்பட்டது). கிராம உதவியாளர் கோவிந்தசாமி காலமாகிவிட்டார். போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-

**1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

<u>4,6,7,8,9,11,12,18,19,22,23,24,26,27,28,29 மற்றும் 30ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>-

தர்மபுரி காவல் ஆய்வாளர் என்னை 18.09.2012 அன்று என்னை தொடர்பு கொண்ட சமயத்தில் பிரவீன் குமார் என்பவர் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். 19.09.2012 அன்றும் எனக்கு பிரவீன் குமார் என்பவர் யார் என்று நேரடியாக தெரியாது என்றால் போலீசார் 18/9/2012 அன்று விசாரித்த என்னைக் கேட்ட சமயம் மேற்படி நபர் அந்த கிராமத்தில் உள்ளாரா என்று நான் விசாரித்து தெரிந்து கொண்டேன் ஆனால் அந்த நபரை நேரடியாக பார்க்கவில்லை கிராம உதவியாளர் மேற்படி கிராமத்தில் அந்த நபர் இருப்பதாக சொன்னார். 19.09.2012 அன்று பிரவீன் குமார் என்பவரை நான் நேரில் அடையாளம் காண்பிக்கவில்லை என்றால் கிராம உதவியாளர் அந்த நபரை அடையாளம் காண்பித்தார் பொதுமக்களும் சொன்னார்கள் அதன் பெயரில் நான் தெரிந்து கொண்டேன். அன்றைய தினம் பிரவீன் குமார் என்பவர் அந்த நபர் தானா என்று நேரில் தெரியாது என்றால் சரிதான். மேற்படி பிரவீன் குமார் என்பவர் எந்த பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்தார் என்று போலீசார் என்னை விசாரித்த சமயம் சொல்லவில்லை என்றால் பாண்டூர் பஸ் ஸ்டாப்பில் தான் நின்று கொண்டிருந்தார். போலீசார் என்னை விசாரித்த

சமயம் மேற்படி நபர் பாண்டூர் பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டு இருந்தார் என்று சொல்லவில்லை என்றால் தெரியவில்லை. எனக்கு வாக்குமூலம் மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் குறித்து வித்தியாசம் தெரியாது என்றால் சரிதான். மேற்படி பஸ் ஸ்டாப்பில் ஆய்வாளர் எதிரியை எவ்வளவு நேரம் விசாரித்தார் என்றால் 1 மணி நேரம் இருக்கும். ஆய்வாளர் கேள்வி கேட்க அந்த நபர் பதில் சொன்னார் அதை எழுதிக் கொண்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு எழுதிய ஆவணத்தில் நானும் எனது உதவியாளரும் கையெழுத்து செய்தோம் என்றால் சரிதான் சாட்சி தற்பொழுது மடிக்கணினியில் டைப் செய்தார்கள் என்று சொல்கிறார். மேற்படி தேதியில் என்னென்ன விவரம் சொல்லப்பட்டது என்ற விவரம் தற்போது என்னால் சொல்ல இயலாது என்றால் ஆமாம். மகஜர் என்பது என்னவென்றால் வாக்குமூலம் தான். மகஜர் எத்தனை பக்கங்கள் என்றால் தெரியாது. மகஜர் எழுதுவதின் நோக்கம் என்னவென்று எனக்குத் தெரியாது என்றால் ஆமாம். போலீசார் கைப்பற்றியதாக கூறும் சான்று பொருட்களை என்னிடம் காண்பித்து மறுவாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். லேப்டாப்பில் என்ன குறியீடு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான் அன்றைய தேதியில் கைப்பற்றியதாக கூறும் லேப்டாப் எது என்று தெரியாது என்றால் தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்பட்டது தான் ஆனால் தற்பொழுது வேறு லேப்டாப் காண்பித்து கேட்டால் என்னால் அடையாளம் காண்பிக்க இயலாது என்றால் சரிதான். கையால் எழுதப்பட்டதாக கூறும் கேள்வித்தாள்கள் எத்தனை பக்கங்கள் கொண்டது என்றால் வெகு காலம் ஆனதால் தற்பொழுது நினைவில்லை. எத்தனை பேப்பர்கள் என்றும் நினைவில்லை. நினைவில்லை என்று கூறும் நிலையில் என்னிடம் தற்பொழுது காண்பித்த கேள்வி தாள்கள் தான் கைப்பற்றப்பட்டது என்று என்னால் உறுதியாக சொல்ல இயலாது என்றால் தவறு இந்த பேப்பர்கள்தான் கைப்பற்றப்பட்டது. கைப்பற்றியதாக கூறும் பேப்பர்களில் இரண்டு பக்கங்களிலும் எழுதப்பட்டது என்றால் சிங்கிள் பேஜ் தான். பக்கத்திற்கு பக்கம் வரிசை எண் போடப்பட்டதா என்றால் தெரியவில்லை. மகஜரில் திருத்தங்கள் செய்யப்பட்டதா என்றால் நினைவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் அரசு தரப்பு சான்று 43 மகஜரில் உள்ள திருத்தங்கள் எப்பொழுது யாரால் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். காவல்துறையினர் கேட்டுக் கொண்டதன் பெயரில் அவர்கள் காவல் நிலையத்தில் வைத்து தயாரித்து வைத்திருந்த ஆவணங்களில் நான் கையெழுத்து செய்துவிட்டு போலீசார் கேட்டுக் கொண்டதன் பெயரில் தற்பொழுது போலீசாருக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**